Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆடி 11 | [ 26-07-1993 ] | திங்கட்கிழமை | ஓசை 158

## நிதி வர்த்தகத்தை நிறுத்த ஷப்றா நிதி நிறுவனம் முடிவு

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் நிறுவனம் தனது நிதித்துறை நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ள இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் தலைமைச் செயலகம் கொழும்பில் இயங்கி வருகிறது ஷப்றா நிறுவனம் நிதி வர்த்தகத்தைச் செய்வதற்கான 1993 ஆம் ஆண்டிற்கான உரிமத்தை [லைசன்ஸ்] புதுப்பிக்க மத்திய வங்கி மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை அடுத்து ஷப்றா அதன் நிதித்துறை நடவடிக்கையை முற்றாக நிறுத்திக்கொள்ள முடிவு செய்துள்ளது. 1991, 1992 ஆம் ஆண்டுகளிலும் ஷப்றா நிறுவனத்தின் லைசன்ஸைப் புதுப்பிக்க மத்திய வங்கி தயக்கம் காட்டியதாகவும் சொல்லப்படுகிறது. வைப்பாளர்களின் முதலீட்டை விரைவில் திருப்பிச் செலுத்துவதற்கான திட்டம் ஒன்று குறித்து நிறுவனத்தின் நிதி ஆலோசகர்களிடம் ஆலோசனை கலந்து வருவதாகவும், அத்திட்டம் பற்றிக் குறுகிய காலத்தில் தெரியப்படுத்த உள்ளதாகவும் ஷப்றா [4ஆம் பக்கம் பார்க்க]

## 'இதய பூமி - I' பெரு வெற்றி!

# மண்கிண்டி மலை ராணுவ முகாம் தகர்ப்பு;

# 40 சிங்கள படையினர் பலி; பலர் படுகாயம்

## மினிமுகாம்களும் புலிகளால் தகர்ப்பு

(மணலாறு)

மணலாற்றுப் பிரதேசத்தில், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இதயபூமி 1 தாக்குதல் நடவடிக்கையின் போது, பாரிய இராணுவ முகாமான - மண்கிண்டிமலை இராணுவ முகாமையும் அதை அண்டிய மினி முகாம்கள், காவலரண்கள் என்பனவற்றையும் கைப்பற்றி அழித்தனர்.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இவ் வெற்றிகரமான தாக்குதலில் உயர் அதிகாரி உட்பட நாற்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு பலர் காயங்களுடன் தப்பி ஓடியுள்ளனர்.

இத்தாக்குதல் பற்றிய விபரம் வருமாறு:

மணலாற்றுப் பகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்டிருந்த மண்கிண்டிமலை இராணுவ முகாமும், இம்முகாமிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் மலையில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ மினிமுகாமும் கிராமப் பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்டிருந்த மினிமுகாம்கள் காவலரண்கள் என்பனவும் இத்தாக்குதலின்போது அழிக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் அதிரடிப்படையினர் திட்டமிட்டு ஒரே நேரத்தில் இத்திடீர் தாக்குதலை நடாத்தினர். புலிகள் தாக்குதலை ஆரம்பித்து சுமார் 30 நிமிட நேரத்தில் இராணுவ முகாம், மினி முகாம்கள், காவலரண்கள் என்பன புலிகள் வசம் வீழ்ச்சியடைந்தன.

விழ்ச்சியடைந்த இராணுவ முகாம், மினிமுகாம்கள் மற்றும் காவலரண்கள் என்பன எரித்தும் தகர்த்தும் முற்றாக அழிக்கப்பட்டன.

இவ்வெற்றிகரமான தாக்குதலில் நாற்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்

## மூன்று சிப்பாய்கள் கைது!
## 17 சடலங்களும் மீட்பு

நேற்று அதிகாலை மணலாறுப் பகுதியில் இராணுவத்தினரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மண்கிண்டிமலை இராணுவ முகாம்

சடலங்களை

யுள்ளதாகவும்

விடுதலைப் புலிகள் கைப்பற்றி

அங்கிருந்து வரும் செய்திகள்

## எதிரியிடம் கைப்பற்றிய இராணுவ தளபாடங்கள்

| | | | |
|---|---|---|---|
| ரி. 56 2 ரக துப்பாக்கி | — 65 | கண்ணீர்க்கான் கோல்சர் | — 80 |
| ரி. 56-1 ரக துப்பாக்கி | — 52 | ரேப் ரெற | — 03 |
| ரி. 56 புதியரக துப்பாக்கி | — 02 | டெக் | — 01 |
| ரி-81 ரக துப்பாக்கி | — 13 | ஸ்ரபிலைசர் | — 02 |
| 303 ரக துப்பாக்கி | — 24 | ஒயில் கான் [சிங்கர்] | — 51 |
| ஏ. கே. எல். எம். ஜி ரகதுப்பாக்கி | — 07 | ஏ கே எல். எம். ஜி கோல்சர் | — 69 |
| பி. கே. எல். எம் ஜி ரகதுப்பாக்கி | — 01 | தொப்பி | — 176 |
| 60 மி. மீ மோட்டார் | — 05 | மில்றி சூ (சோடி) | — 257 |
| 81 மி மீ. மோட்டார் | — 01 | மில்றி ஹிட்பாக் | — 57 |
| வேட்டைத் துப்பாக்கி | — 11 | சிவில் ஹிட்பாக் | — 75 |
| 203 கைத்துப்பாக்கி (டொங்கான்) | — 04 | சாதாரண சூ (சோடி) | — 165 |
| ஆர். பி. ஜி. | — 07 | தண்ணீர்க்கான் | — 77 |
| றிப்பிற்றர் | — 01 | சாப்பாட்டுப்பெட்டி | — 168 |
| ஆர். பி. ஜி. எறிகணை மனித எதிர்ப்பு | — 44 | மில்ரி பெல்ட் | — 55 |
| | | கமரா | — 04 |
| ஆ பி. ஜி. எறிகணை டாங்கி எதிர்ப்பு | — 76 | மழைக்கவசம் | — 250 |
| | | சப்னை பாக் | — 62 |
| புறப்புளர் | — 138 | சுவர்க்கடிகாரம் | — 01 |
| 60 எம். எம். எறிகணை | — 231 | வரைபட உறை | — 03 |
| 60 எம். எம். எறிகணை வெளிச்சக்குண்டு | — 26 | சிறிய கூடாரச் சீலை (ரெண்ற்) | — 35 |
| | | 50 கலிபர் ரவைகள் | — 657 |
| 81 எம். எம். எறிகணை | — 22 | ஏ. கே. எல். எம். ஜி ரவைகள் | |

# மூன்று சிப்பாய்கள் கைது! 17 சடலங்களும் மீட்பு

நேற்று அதிகாலை மணலாறுப் பகுதியில் இராணுவத்தினரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பின்போது மூன்று இராணுவச் சிப்பாய்கள் விடுதலைப் புலிகளால் உயிருடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை இவ்வெற்றிகரத்தாக்குதலின் போது கொல்லப்பட்ட 40 இற்கும் மேற்பட்ட இராணுவச் சிப்பாய்களில் 17 சிப்பாய்களின் சடலங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மணலாறுப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலின் போது இராணுவத்தினர் பலர் காணாமற்போய்விட்டதாக கொழும்பில் கூட்டுப் படைத்தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# பத்து புலிகள் வீரச்சாவு

நேற்று மணலாறு பிரதேசத்தில் மண்கிண்டி மலை இராணுவ முகாமின் மீதும், மினி முகாமகள் மீதும விடுதலைப் புலிகள் நடாத்திய இதயபூமி - I தாக்குதல் நடவடிக்கையின் போது வெற்றிக்கு வழிவகுத்து பத்து விடுதலைப்புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

★ லெப்டினன்ட் ஈழவேந்தன்/அமீர் (கந்தசாமி விமலேந்திரன்) கனகராயன் குளம், வவுனியா.

★ லெப்டினன்ட் துரைக்கண்ணன் / விக்ரம் (வைத்தியலிங்கம் தயானந்தன்) ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி

★ 2 ஆம் லெப்டினன்ட் சியாமணி (யோகச்சந்தரன் ரவிசங்கர்) திருக்கோணமலை தற்போதைய முகவரி சுதந்திரபுரம் சந்தி, புதுக்குடியிருப்பு,

★ லெப்டினன்ட விமலன்/வில்லவன் (கிருஷ்ணபிள்ளை புண்ணியமூர்த்தி), வீரமகாநாடு, தோப்பூர், மூதூர்.

★ லெப்டினன்ட் குயிலன் (சிவப்பிரகாசம் சந்தகுமார்), மூளாய் தெற்கு.

★ லெப். திருமலைநம்பி /பெர்னான்டோ (வரப்பிரகாசம் யுக்தீபன்). 2 ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறை. யாழ்ப்பாணம்.

★ லெப்டினன்ட் அழகப்பன் / காந்தி. (கபிரியல்பிள்ளை யோதிகாவலன்), ஏழாலை கிழக்கு, ஏழாலை.

★ லெப்டினன்ட் நக்கீரன் / செந்தூரன். (சோமசுந்தரம் அரசரத்தினம்), பழுகாமம் 1 மட்டக்களப்பு.

★ லெப்டினன்ட் தமிழ்வாணன் / வாசன் (செல்லையா வேதா,) யூனியன் வீதி, கோயில் போரதீவு, மட்டக்களப்பு.

★ 2 ஆம் லெப்டினன்ட் புகழரசன், (சின்னத்துரை கோணேஸ்வரன்), காரைநகர், யாழ்ப்பாணம்.

வீரச்சாவடைந்த இப்பத்து போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

# 3 மணிநேர தேடி அழிப்பு

(மணலாறு)

மண்கிண்டிமலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதையடுத்து முகாமிலிருந்து தப்பியோடிய சிங்கள இராணுவச் சிப்பாய்களை தேடி விடுதலைப் புலிகள் நேற்று இப்பகுதியில் பெரும் தேடுதல் வேட்டையை நடத்தினர்,

விடுதலைப் புலிகளின் இத்தேடுதல் நடவடிக்கை மூன்று மணிநேரம் நீடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இத்தாக்குதல் நடவடிக்கையின் போது ஏழு கிலோ மீற்றர் நீளமான இராணுவப் பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.

# புல்டோசர் புலிகளால் அழிப்பு

(மணலாறு)

மணலாற்றில் நேற்று அதிகாலை மண்கிண்டிமலை இராணுவமுகாம் மீதும் மற்றும் மினி முகாம்கள் மீதும் விடுதலைப் புலிகள் நடாத்திய இதயபூமி 1 எனும் பாரிய தாக்குதல் நடவடிக்கையின் போது பல வாகனங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றில் சில அழிக்கப்பட்டன.

அப்பகுதியிலிருந்த தமிழர் குடியிருப்புக்களை அழிக்கப்பயன் பட்டு வந்த புல்டோசர் வாகனமொன்று விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது மேலும் இரண்டு உழவு இயந்திரங்களும் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

இதேவேளை இரண்டு மோட்டார் சைக்கிள்களும் ஒரு துவிச்சக்கர வண்டியும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

சியடைந்தன.

விழ்ச்சியடைந்த இராணுவ முகாம், மினிமுகாம்கள் மற்றும் காவலரண்கள் என்பன எரித்தும் தகர்த்தும் முற்றாக அழிக்கப்பட்டன.

இவ்வெற்றிகரமான தாக்குதலில் நாற்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல இராணுவத்தினர் காயமடைந்தனர்.

இதேவேளை, இத் தாக்குதலை ஊர்ஜிதம்செய்த சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஓர் உயர் அதிகாரி உட்பட இருபத்திமூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

# துணைப் படை பெரும் பங்கு

(மணலாறு)

மணலாறு மண்கிண்டி மலைப்பகுதியில் நேற்று விடுதலைப் புலிகள் நடாத்திய இதயபூமி I தாக்குதல் நடவடிக்கையின் போது துணைப் படைவீரர் பெரும் பங்களிப்பை வழங்கினர்

சிறிலங்கா இராணுவத்தின் மிகப்பலம் பொருந்திய முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ முகாம் மீதான விடுதலைப் புலிகளின் இவ் வெற்றிகரத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகளின் துணைப்படைவீரர்களின் அணி பெருமளவில் பங்காற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

# 17 குடியேற்ற சிங்களவர் பலி

(மணலாறு)

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் பகுதியில் நடைபெற்ற மோதல்களின் போது சிங்கள குடியேற்ற வாசிகளும் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து நேற்றிரவு தகவல் வெளியிட்ட சிறிலங்கா வானொலி இப்பகுதியில் 17 சிங்களப் பொது மக்கள் பலியானதாக குறிப்பிட்டது மண்கிண்டிமலை இராணுவமுகாம் சிங்கள குடியேற்றக் கிராமங்களுக்குப் பாதுகாப்பாக அமைந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

| | | |
|---|---|---|
| ஃ | [illegible] | — 44 |
| ஃ | ஆர். பி. ஜி. எறிகணை மனித எதிர்ப்பு | — 44 |
| ஃ | ஆ பி. ஜி. எறிகணை டாங்கி எதிர்ப்பு | — 76 |
| ஃ | புறப்புளர் | — 138 |
| ஃ | 60 எம். எம். எறிகணை | — 231 |
| ஃ | 60 எம். எம். எறிகணை வெளிச்சக்குண்டு | — 26 |
| ஃ | 81 எம். எம். எறிகணை | — 22 |
| ஃ | 81 எம் எம். எறிகணை வெளிச்சக்குண்டு | — 22 |
| ஃ | 81 எம். எம். இன்சென்றி (எரி ஷெல்) | — 02 |
| ஃ | ஜே. ஆர். ரக கைக்குண்டு | — 154 |
| ஃ | எம். 75 ரக கைக்குண்டு | — 71 |
| ஃ | எம். 73 ரக கைக்குண்டு | — 166 |
| ஃ | 40 எம். எம். எறிகணை | — 20 |
| ஃ | பெரிய ஜே. ஆர். கைக்குண்டு | — 01 |
| ஃ | ரி. என். ரி. கைக்குண்டு | — 03 |
| ஃ | ரி. பி. கிளைமோர் சிறியது | — 07 |
| ஃ | வாகனக் கண்ணிகள் | — 10 |
| ஃ | கான் எக்ஸ்புளோடர் | — 10 |
| ஃ | டப்பி மிதிவெடிகள் | — 98 |
| ஃ | டப்பி 2 2. ரக மிதிவெடிகள் | — 85 |
| ஃ | பச்சைநிற காற்சட்டை | — 59 |
| ஃ | பச்சைநிற மேற்சட்டை | — 133 |
| ஃ | உருமறைப்பு நீள காற்சட்டை | — 188 |
| ஃ | உருமறைப்பு மேற்சட்டை | — 172 |
| ஃ | கைக்கடிகாரங்கள் | — 04 |
| ஃ | சுசுக்கி 125 மோட்டார் சையிக்கிள் | — 01 |
| ஃ | ஹொண்டா 175 ரக மோட்டார் சையிக்கிள் | — 01 |
| ஃ | பணம் (ரூபா) | 2,18,650 |
| ஃ | 12 wமின்கலப்பெட்டி | — 01 |
| ஃ | நடுத்தர ரவைகள் | 50,349 |
| ஃ | ஜி பி எம். ஜி.ரவைகள் லிங்குடன் | 7,585 |
| ஃ | ஸ்ரெச்சர் | — 01 |
| ஃ | ஈ. டி. பெரிது | — 05 |
| ஃ | சைகை பிளாஸ் | — 39 |
| ஃ | புகைக்குண்டு | — 04 |
| ஃ | கான் பரா லைற் | — 02 |
| ஃ | திசையறி கருவி | — 03 |
| ஃ | தலைக்கவசம் | — 111 |
| ஃ | பெரிய பற்றி 120 அம். | — 03 |
| ஃ | சிறிய பற்றி | — 01 |
| ஃ | ரி. வி. | — 02 |
| ஃ | ஏ. கே. கோல்சர் | — 105 |

| | | |
|---|---|---|
| ஃ | [illegible] | — [illegible] |
| ஃ | கமரா | — 04 |
| ஃ | மழைக்கவசம் | — 250 |
| ஃ | சப்ளை பாக் | — 62 |
| ஃ | சுவர்க்கடிகாரம் | — 01 |
| ஃ | வரைபட உறை | — 03 |
| ஃ | சிறிய கூடாரச் சீலை (ரென்ற்) | — 35 |
| ஃ | 50 கலிபர் ரவைகள் | — 657 |
| ஃ | ஏ.கே.எல்.எம்.ஜி ரவைகள் லிங்குடன் | — 2394 |
| ஃ | பி கே.எல்.எம் ஜி ரவைகள் | — 2102 |
| ஃ | 303 ரக ரவைகள் | — 1517 |
| ஃ | காட்ரஜ் | — 250 |
| ஃ | நடுத்தர காஸ் ரவைகள் | — 23 |
| ஃ | 5 56 ரவைகள் | — 12 |
| ஃ | இரவு பார்வைகாட்டி | — 02 |
| ஃ | ஆர்.பி.ஜி தொலைநோக்கி | — 08 |
| ஃ | 60 எம். எம் தொலைநோக்கிகள் | — 04 |
| ஃ | 60 எம். எம் புரொஜெக்ரர் | — 04 |
| ஃ | தொலை நோக்கிகள் | — 04 |
| ஃ | ஆர்.பி.ஜி றொட் | — 08 |
| ஃ | ஆர்.பி.ஜி பிரஸ் | — 06 |
| ஃ | 60 எம். எம் மோட்டார் துப்பரவாக்கி | — 04 |
| ஃ | ஏ கே. எல் எம் ஜி ரகதுப்பாக்கி துப்பரவாக்கிகள் | — 13 |
| ஃ | ஏ.கே.எல்.எம் ரக துப்பரவாக்கி றொட் | — 12 |
| ஃ | ஏ.கே. துப்பரவாக்கி செற் | — 35 |
| ஃ | 60 எம்.எம் மேலதிக சேர்ச் லைற் | — 02 |
| ஃ | டொங்கான் துப்பரவாக்கிகள் | — 02 |
| ஃ | பி.கே துப்பரவாக்கி | — 01 |
| ஃ | ஏ.கே.எல்.எம்.ஜி. ரம் ரவைக்கூடு | — 51 |
| ஃ | 303 ரவைக்கூடுகள் | — 22 |
| ஃ | ஏ.கே ரவைக் கூடுகள் | — 455 |
| ஃ | ரி-81 ரக ரவைக் கூடுகள் | — 55 |
| ஃ | ரி-81 ரக எல்.எம் ஜி ரவைக்கூடு | — 01 |
| ஃ | ரி-81 ரக கத்தி | — 02 |
| ஃ | சாதாரண கத்திகள் | — 02 |
| ஃ | கிளைமோர் வெடிக்க வைக்கும் கருவி | — 01 |
| ஃ | துவிச்சக்கரவண்டி | — 01 |
| ஃ | மின்பிறப்பாக்கி | — 01 |
| ஃ | குண்டு துளைக்காத கவசம் | — 58 |

# இவ்வாண்டின் மிகப் பெரும் தாக்குதல்

(மணலாறு)

மண்கிண்டி மலைப்பகுதியில் நேற்று விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட இதயபூமி 1 எனும் தாக்குதல் நடவடிக்கை இந்த வருடத்தில் நடைபெற்ற மிகப்பெரிய தாக்குதலாகும். மேலும் இத்தாக்குதலின் போது மண்கிண்டி மலை இராணுவமுகாமும் அதற்கு அண்மையிலுள்ள மினிமுகாமும் இத் தாக்குதலின்போது முற்றாக கைப்பற்றி அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் கட்டைக் காட்டில் புலிகள் தாக்குதல் நடத்தியபோது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுக்கு அடுத்தபடியாக பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டமை இத் தாக்குதலிலேயே ஆகும்.

ஆனையிறவில் 1991 ஜூலையில் இடம்பெற்ற ஆகாய, கடல், வெளி இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் விடுதலைப்புலிகளால் இதய பூமி1 என பெயரிடப்பட்டு நடாத்தப்பட்ட தாக்குதல் நடவடிக்கையும் இதுவாகும்.

மேலும் இவ்வருடத்தில் ஒரே தாக்குதலில் கூடிய எண்ணிக்கையிலான இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பெரும் எண்ணிக்கையிலான இராணுவத் தளபாடங்கள் கைப்பற்றப்பட்டும் உள்ளன.

## வரி விளம்பரம்


### வாங்கப்படும்

நன்றாகக் காய்ந்த எலும் மிச்சங்கோத (பூஞ்சணம் பிடிக்காத) 1 கிலோ 50/ ரூபாவுக்கு வாங்கப்படும். காவேரி சீயாக்காய்ப்பவடர் தயாரிப்பாளர், No 115 ஆடியபாதம் வீதி, நல்லூர். (5512)

### முதலாம் பிள்ளை

இன்று தமிழில் வானொலி நாடகப் எழுதுபவர்களில் தலைசிறந்தவர் என்று விமர்சகர் K S சிவகுமாரனால் பாராட்டப்பட்ட அராலியூர் ந சுந்தரம்பிள்ளையின் முதலாம் பிள்ளை 30/- ஒரேயொரு வானொலி நாடக நூல். (4095)

### வில்வம் பழம்

வில்வம்பழம் தேவை. தொடர்பு—மில்க்வைற் (சி 7077)

### காவேரி சீயாக்காய் பவுடர்

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம், வினாயகர் களஞ்சியம், ஆஸ்பத்திரி றோட். சிவசம்பு களஞ்சியம், மீன்சார நிலைய வீதி. வெங்கடேசன், வைத்தீஸ்வரா சந்தி, சிவன் வடக்கு வீதி (5513)

### வியாபாரிகட்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள், லேஸ், நூல் வகைகள், எவர்சில்வர் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருள்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக்கொள்ள- ஜெயா அழகுசாதன மாளிகை. 177- A மின்சார வீதி, யாழ்ப்பாணம். (சி/6968)

### ஸ்ரீகாந்த்புத்தகசாலை

இந்திய நாவல்கள், டிக்செனெறிகள், இலங்கை வெளியீடுகள், ஆங்கில தமிழ் சொற்களஞ்சியம், (மட்றாஸ் டிக்சனெறி) கொமிக்ஸ் மங்கை மலர் கழிவுவிலையில் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர் (சி-7071)


### தற்கொலை

குடும்பஸ்தர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இச் சம்பவம் கடந்த வெள்ளியன்று மாலை கரவெட்டி மதவொனி என்னுமிடத்தில் இடம் பெற்றது.

## ‘புளொட்’ சுவரொட்டியை கிழித்த மூவர்மீது தாக்குதல்

(வவுனியா)

வவுனியாவில் தமிழர் ஒருவரின் வீட்டில் ஒட்டியிருந்த புளொட் குழுவினரின் சுவரொட்டியை கிழித்த மூவர் புளொட் குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டு மூன்று தினங்கள் தாக்கப்பட்டனர்.

மூன்று தினங்கள் அடைத்து வைத்து தாக்கப்பட்ட இம் மூவரும் பின்னர் விடுவிக்கப் பட்டனர்.

### கூட்டுறவு தினப் போட்டிகள்

(வடமராட்சி கிழக்கு)

சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு, வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கிடையேயும், அங்கத்தவர்களுக்கிடையேயும் போட்டிகளை நடத்தி வருகின்றது.

வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகத்தின் அனுசரணையுடன், வடமராட்சி கிழக்கிலுள்ள உடுத்துறை, நாகர் கோவில் ஆகிய இரு கொத்தணிகளிலுமுள்ள பாடசாலை மாணவர்களிடையே, பேச்சு, கட்டுரை நடனம், நாடகம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. (36)

### கல்விக்காக வெளிச்ச வசதி

(தொல்புரம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின், சித்தன்கேணி மாணவர் கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் பாடசாலை மாணவ, மாணவியருக்கான பகல், இரவு கல்வி வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

சித்தன்கேணி வட்டுத் தொண்டேயம் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடக்கும் மேற்படி பகல்நேர வகுப்புக்களில் 300ற்கு மேற்பட்ட மாணவர்களும், இரவு நேர வகுப்புக்களில் பெற்றோமாக்ஸ் லாம்பு வெளிச்ச வசதியுடன் சுமார் 150க்கும் மேற்பட்ட மாணவர்களும் கல்வியைக் கற்று பயனடைந்து வருகின்றனர். (41)

### வினாடிவினா போட்டியில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி யாழ் மாவட்ட கூட்டுறவு சபையினால் அதன் அங்கத்துவ சங்கங்களின் பணியாளர்களிடையே யாழ் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட ‘வினாடி வினா’ போட்டியில் புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் முதலாம் இடத்தைப் பெற்று சாதனைபடைத்துள்ளது. மேற்படி போட்டி 24-ம் திகதி சனிக்கிழமை யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற்றது. (22)

### புதிய வீதி அமைப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் குடாரப்புக்கும் நாகர் கோயிலுக்குமிடையே நான்கு கிலோமீற்றர் நீளமான கடற்கரை வீதி புதிதாக அமைத்து முடிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் (கியூடெ’) இவ் வீதியினை உளூர் மூலப்பொருள்களைக் கொண்டு அமைத்து உதவியுள்ளது.

இவ் வீதி அமைக்கப்பட்டதினால் வடமராட்சி கிழக்கின் கரையோரப் போக்குவரத்துப் பாதை சுண்டிக்குளத்திலிருந்து நாகர் கோவில் வரை விரிவடைந்துள்ளதுடன் கரையோரத்தில் வாழ்கின்ற மக்களின் போக்குவரத்துத் தூரமும், கஷ்டமும் குறைவடைந்துள்ளது (36)


### யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம்
### மகாபொலக்கொடுப்பனவு 7ஆம் தவணைப்பணம்

பல்கலைக்கழக மாணவர்களுக்கான 7ஆம் தவணை மகாபொலக் கொடுப்பனவுகளை 26 07-1993 முதல வழங்க பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இக்கொடுப்பனவுகள் பற்றிய முழுவிபரங்களும், அறிவுறுத்தல்களும் பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன இதற்கமைவாக கொடுப்பனவை உரித்துடையமாணவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்

பதிவாளர்.

(சி/7061)

## விதை உருளைக்கிழங்கு விநியோகம்-1993/94

எதிர்வரும் 1993/94 காலபோகத்திற்குத் தேவையான டிசிறி இன விதை உருளைக்கிழங்கை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன இதற்குத் தேவையான முழுப்பணத்தையும் முற்பணமாகச் செலுத்தியே பெறவேண்டியுள்ளது. எனவே, விதை உருளைக்கிழங்கு பெறவிரும்பும் விவசாயிகள் தமது பிரதேச கமநலச்சேவை நிலையங்களில் அந்தர் ஒன்றிற்கு ரூபா 3500/- வீதம் 10-08-1993ற்கு முன்னர் பணத்தைச் செலுத்தி, பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.


ஒவ்வொரு கமநலச்சேவை நிலையத்திலும் விதை உருளைக்கிழங்கு பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை கமநலச்சேவை நிலைய ரீதியாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒரு விவசாயிக்கு 4 அந்தர் மட்டுமே வழங்கப்பட உள்ளதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட உதவி ஆணையாளர்,
கமநலசேவைததிணைக்களம்,
யாழ்ப்பாணம்.

உதவி விவசாயப் பணிப்பாளர்
(விரிவாக்கம்)
யாழ்ப்பாணம்.

கமநலசேவைகள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1993-07-20 (சி/7078)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
1978-12-18

❋ ❋ ❋

தாயக விடிவில்:
1991-07-18

### 2-ம் லெப். குமுதன்
(வைத்திலிங்கம் தயாளன்)

நீ மறைந்து ஈராண்டு நிறைந்ததடா
நேற்றையைப் போல் நினைவில் நிழலாடுகின்றாய்
திரும்புமிடமெல்லாம் உன் திருவுருவம்
இலங்குமடா ஈழமண்ணின் வீதியெங்கும்.
சிறப்புடனே போராடிச் செங்குருதி
சிந்தி உயிர் நீத்திடினும் ஈழமண்ணில் இனிப்
புலிப்படையே தமிழ் மொழியை ஆட்சிசெய்யும்
போனபுலி வீரருக்கும் வாழ்த்துச் சொல்லும்.

இவரையும் இவருடன் வீரச்சாவைஅணைத்துக்கொண்டவர்களையும் இந்நாளில் நினைவு கூருகிறோம்.

26-07-93 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் நினைவுக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு போராளிகளையும் உறவினர்களையும் நண்பர்களையும் அழைக்கிறோம்.

ஜனசக்தி வீதி,
சிறுப்பிட்டி மேற்கு.
நீர்வேலி.

இங்ஙனம்
அப்பா, அம்மா, அக்கா.

(5502)

## புனித பத்திரிசியார் கல்லூரியில் முத்தமிழ் விழா

புனித பத்திரிசியார் கல்லூரியின் முத்தமிழ் விழா எதிர்வரும் வியாழனன்று பி. ப. நான்கு மணியளவில் கல்லூரியின் மதுரம் சதுக்கத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்கள் பிரதம விருநதினராகக் கலந்து கொள்ளும் இவ் விழாவிற்கான ஏற்பாடுகளை புனித பத்திரிசியார் கல்லூரியின் தவத்திரு தனிநாயகம அடிகளார் முத்தமிழ் மன்றம் மேற்கொண்டுள்ளது.

‘சாப விமோசனம்’ என்னும் அபிநய இசைச் சித்திரமும், ‘பத்திரிசியார் ஏற்றிய பாஸ்கா ஒளி’ என்னும் நாட்டுக்கூத்தும் இடம்பெறவுள்ளன.


நல்லூரில் சுவைதேடும்

## உணவுப் பிரியர்களை ஜெசித்தாரா அழைக்கிறது

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா தனது சேவையை நல்லூரில் விஸ்தரிக்கின்றது.

நல்லைக் கந்தன் எதிரே 24ஆம் திகதி ஆடி 1993 ஆம் ஆண்டு முதல்

### சுவைச் சோலையில்

608/2. பருத்தித்துறை வீதி, (நல்லூர் கந்தன் முன்பாக) தனது ஏகோபித்த வாடிக்கையாளர்களின் நலன்கருதி சேவையை தொடர்கிறது.

நீங்களும் முன்கூட்டியே பதிவு செய்து ஏமாற்றத்தை தவிர்க்கவும்.

மரக்கறி / விரதச்சாப்பாடு
பார்சல் ரூபா 25/- மட்டுமே

பகல் 12. 00 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா
சுண்டிக்குளி மகளிர் முன் ஒழுங்கை, சுண்டிக்குளி.

ஜெசித்தாரா புதுயுகத்தில் புது உருவம்

(சி/7062)


## நினைவு கூருகின்றோம்... 1993-07-26

1983ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறையில் சிங்களக் காடையர்களினால் தாக்கப்பட்டு இதே தினம் மருத்துவ மனையில் வீரச்சாவெய்திய–

★ **சிவானந்தராசா** (சித்திரவேல் சிவானந்தராசா - எல் பி. 03- மூதூர் - திருமலை)

1986ஆம் ஆண்டு அம்பாறை - தாமரைக்குளம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் சூட்டில் வீரச் சாவெய்திய–

**பவான்** (கிருஷ்ணபிள்ளை சுவேந்திரராஜா - தம்பிலுவில் - அம்பாறை)

1987ஆம் ஆண்டு அச்சுவேலிப் பகுதியில் பாதுகாப்பு அரண் அமைக்கும் பணியில் ஈடுபடும் போது சிறிலங்கா இராணுவத்தினர் குறிபார்த்து சுட்டதில் வீரச்சாவெய்திய–

**காந்தி, கார்த்திக்** (மைனா கார்த்தீஸ்வரன் - கண்டி - மலையகம்)

அச்சுவேலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ் பொதுமகன்.

1988ஆம் ஆண்டு சாவகச்சேரி - மட்டுவில் தெற்கில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரின் போது வீரச் சாவெய்திய–

**கண்ணன்** (நமசிவாயம் நற்குணராசா - பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி - யாழ்)

## 90-ம் நாள் நினைவலைகள்

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வரையறுள்ளது)
பி. எஸ். சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# முக்கிய அறிவித்தல்

## கிளைக்குழுத் தேர்தல் - 1993

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவிற்கான நியமனப்பத்திரங்கள் பின்வரும் திகதியில ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1. நியமனப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி — 07. 08 1993 சனிக்கிழமை
காலம்: மு ப. 9 00 மணிதொடக்கம் 10 00 மணிவரை.
அபேட்சகர்கள் நியமனத்தில் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் அன்றைய தினம் மு ப. 10. 00 மணிதொடக்கம 11 00 மணிவரை தேர்தல் உத்தியோகத்தரிடம் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. தேர்தல் நடைபெறும் திகதி: 14.08 1993 சனிக்கிழமை.
காலம்: மு.ப 9.00 மணிதொடக்கம் பி ப. 4.00 மணிவரை.
கிளைகளுக்கான நியமனப்பத்திரங்கள் பின்வரும் இடங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.


| கிளை இல. | கிளைப்பெயர் | ஏற்றுக்கொள்ளப்படும் இடம் |
|---|---|---|
| கிளை. 1 | ஊர்காவற்றுறை | ) கே. கே. எஸ். வீதி, பொன்னம்மா மில் |
| கிளை. 2 | பருத்தியடைப்பு | ) அருகாமையில் உள்ள நிவாரணக்கிளை 1 |
| கிளை. 3 | கரம்பொன் | ) கே. கே எஸ். வீதி, பொன்னம்மா மில் |
| கிளை. 4 | பாலக்காடு | ) அருகாமையில் உள்ள நிவாரணக்கிளை 2 |
| கிளை. 5 | பொன்னாச்சிகடைசந்தி | ) கே கே எஸ். வீதி, பொன்னம்மா மில் |
| கிளை. 6 | நாரந்தனை கிழக்கு | ) அருகாமையில் உள்ள நிவாரணக்கிளை 3 |
| கிளை. 7 | தம்பாட்டி | ) பி. எஸ் சேவிஸ் நிலையம், ஸ்ரான்லிவீதி, |
| கிளை. 8 | நாரந்தனை தெற்கு | ) (தலைமைக் காரியாலயம்) |
| கிளை. 9 | புளியங்கூடல் வடக்கு | ) |
| கிளை. 10 | புளியங்கூடல் தெற்கு | -வண்ணார்பண்ணை சிவன்கோவில் வடக்கு வீதிககிளை |
| கிளை. 11 | சுருவில் | -காங்கேசன்துறைவீதி ஜெசிமா கிளை (அ. உ. கிளை) |
| கிளை. 12 | சரவணை | -ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கஸ்தூரியார் சந்திக்கு அருகாமையில்உள்ளகிளை |

கூட்டுறவு அலுவலகம்
யாழ்ப்பாணம்.
20-7 93

திரு நா. தவநாதன்
தேர்தல் உததியோகத்தர்.

(சி-7048)

# 90-ம் நாள் நினைவலைகள்



## வீரவேங்கை செல்வமணி

[கந்தையா சுதர்சன்]

உயிர்ப்பு
10-04-76

வீரச்சாவு
26-04-93

மறந்தனையோ செல்வமணி
மறந்தனையோ
மலர் நெஞ்சம் மண்மீது
உலர்ந்ததுவோ
கண்மூடி நீண்ட துயில்
கொள்கின்றாய்
கலங்காத நெஞ்சமும்
கலங்குதே செலவமணி

கூற்றுவனின் கொடுமைக்கு
முடிவே இல்லை
குழந்தைமுகம் உன்னையுமா
அழைத்துச் சென்றான்
ஏற்றுகின்ற தீபத்தின்
ஒளியைப்போல- தமிழ்
ஈழத்திற்காய் வாழ்ந்தாயே
செல்வமணி எங்கே சென்றாய்

உன்னுடன் களமாடிய
பதினைந்து வேங்கைகளையும்
நினைக்கின்றோமடா
நெஞ்சம் கலங்காதடா

தமிழ்ப்பிரிவு,
சம்மாந்துறை,
அம்பாறை.

உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(5520)

சாவெய்திய-
**கண்ணன்** (நமசிவாயம் நற்குணராசா - பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி - யாழ்)

1989ஆம் ஆண்டு அம்பனையில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான-
**கனகரத்தினம் ரவீந்திரன்** (தெல்லிப்பழை)

இதே தினம் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய ஆசிரியரான தமிழ்ப் பொதுமகன். நயினாதீவு சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழிளைஞர்கள். பருத்தித்துறை ஓராம் கட்டைப் பகுதியில் இந்தியப்படையினர் மேறகொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட 15 தமிழர்கள். சுதுமலையில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள். பருததித்துறையில் இந்தியப் படையினராற் சுட்டுக் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த இருதயக் கல்லூரி மாணவன்.

1990ஆம் ஆண்டு யாழ் - மயிலிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
**லெப். அன்ரனி கமீத்** (சின்னத்துரை இராசசிங்கம்- அச்சுவேலி தெற்கு - யாழ்)

அம்பாறை - கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்துச் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணமல் போன பொத்துவிலைச் சேர்ந்த 04 தமிழர்கள்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட இளைஞன உட்பட செங்கலடியைச் சேர்ந்த 04 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் ஆ. க. வெ. நடவடிக்கையின் போது சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-
**வீரவன்** (சிவன சந்திரன் - சீனன்குடா, கப்பல்துறை- திருமலை)
**லெப் மணிவண்ணன்** (மேரியோசப் பிரான்சிஸ் சேவியர் - அரிப்பு, முருங்கன் - மன்னார்)

திருமலை - பேராற்றுப் பகுதியில எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப்பிரிந்த-
**பொனி** (சின்னத்தம்பி மோகனதாஸ் - 5-ம் வட்டாரம், திரியாய் - திருமலை)

1992ஆம் ஆண்டு மட்டு - தாழங்குடாச் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கிய போது வீரச்சாவெய்திய-
**துவாரகன்** (குணபால் சிறீதரன் - ஏறாவூர் - மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-7075)

### சிந்தனைக்கு

கெட்டவர்களுக்கு உதவி செய்வது கூட நல்லவர்களுக்கு தீங்கு செய்வது போல ஆபத்தானது.

— ப்ளாட்டஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-07-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண்-05

## பேரினவாதிகளின் பேய்க்கூச்சல்

சிங்களப் பேரினவாதிகளின் ஆத்திரம் தற்பொழுது சர்வதேச நிதி நிறுவனங்கள், மனிதநேய ஸ்தாபனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பக்கம் திரும்பியுள்ளது. இவ் ஸ்தாபனங்களை, தமிழர் போராட்டத்திற்கு ஆதரவாகச் செயல்படும் ஒற்றர் நிறுவனங்கள் என்றும், இனப் பிரச்சினையின் பின்னணியில் செயற்பட்டு, ஊக்கமும், ஒத்தாசையும் வழங்கும் ஸ்தாபனங்கள் எனவும் சிங்களப் பேரினவாதிகள் கூச்சலிடத் தொடங்கியுள்ளனர்.

அதாவது, சிறிலங்கா அரசாங்கத்தின் ஒடுக்கு முறைக்கு உள்ளாகியுள்ள தமிழ் மக்களுக்கு சிறிதளவு உதவிகளை இம் மனிதநேய, அரச சார்பற்ற நிறுவனங்களும், சர்வதேச நிறுவனங்களும் வழங்கி வருகின்றமையே பேரினவாதிகளின் கூச்சலுக்குக் காரணமாகும்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம், சர்வதேச நிதி நிறுவனங்களிடம் இருந்தும், மனிதநேய ஸ்தாபனங்களிடம் இருந்தும் பெரும் தொகை நிதியை கடனாகவும் அன்பளிப்பாகவும் வருடா வருடம் பெற்றுக்கொள்கின்றது. இந்நிதி நிறுவனங்களின் உதவியே சிங்கள அரசையும், வடக்கு கிழக்கில் போரையும் தொடர்ந்துநடத்திச் செல்வதற்குப் பெரிதும் உதவி புரிவதாகவுள்ளது.

சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள், ஸ்தாபனங்கள் தமது நிதி உதவி அரசின் போர்ச் செலவீட்டிற்குப் பயன்படுத்துவதில்லை என உறுதி செய்து கொள்கின்றனவாயினும் அவற்றின் உதவியானது போரை ஏதோ ஒருவழியில் நடத்த பேருதவி புரிபவையாகவே உள்ளன. அதாவது, கிடைக்கப்பெறும் நிதி உதவி போர் தவிர்ந்த அரசின் ஏனைய செலவீட்டை நிவர்த்தி செய்யும் பட்சத்தில், அரசிற்கு ஏற்றுமதி மூலமும், உள்நாட்டு உற்பத்திமூலமும் கிடைக்கும் வருவாய் போருக்காகச் செலவிடப்படுகின்றது என்பதே உண்மை. அதாவது ஏனைய செலவீடுகளை அந்நிய உதவிகள் கவனித்துக் கொள்ள. போர்ச் செலவீட்டை உள்நாட்டு உற்

## ஐ. தே. க.-காமினி இணைவு; இ. தொ. கா. உறவு முறியலாம்

காமினி திசநாயக்கா உட்பட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட முன் வந்தால் அது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு பெரும் தலையிடியை உருவாக்கும் என்று கூறப்படுகின்றது.

முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்க இணைவதால் காங்கிரஸ் இதுவரை மேற்கொண்டிருந்த சிலசெயல் திட்டங்கள் கேள்விக்குரியதாகி விடலாம் என்றும் கொழும்பிலிருந்து வெளியிடப்படும் யுக்திய செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவுடன் அமைச்சர் தொண்டமானுக்கு பலகருத்து வேறுபாடுகள் உருவாகியிருப்பதாகவும், காமினி கட்சியினர் இணைந்தால் அது மேலும் விரிவடையக் கூடிய சாத்தியப்பாடுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டங்களை தனியார் மயப்படுத்துதல், உற்பத்திகளை சந்தைப்படுத்துதல் என்பன போன்ற விடயங்களில் காமினி திசநாயக்க அரசுக்கு தெரிவித்த யோசனைகள் தொடர்பாக அமைச்சர் தொண்டமான் முழுமையான எதிர்ப்பு தெரிவித்திருந்தவர் என்பதும், இ. தொ. காவிலிருந்து வெளியேறிய பலரும் காமினி கட்சியுடன் இணைந்து போட்டித் தொழிற் சங்கம் அமைத்து இருந்ததும் தெரிந்ததே.

இவற்றின் காரணமாக காமினி திசநாயக்கா கட்சியினர் அரசுடன் இணைந்தால் இ. தொ. கவுக்கும், ஐ. தே. கவுக்கும் உறவுகள் முறிவடையலாம் எனவும் யுக்திய மேலும் கூறியுள்ளது.

## இந்திய உளவுத் துறையுடன் ஜே.வி.பி. தலைவர் தொடர்பு

(கொழும்பு)

ஜே. வி. பியின் நடவடிக்கைகளை மீண்டும் துரிதப்படுத்தவே இந்தியாவில் தங்கியிருந்த ஜே. வி. பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க சிறிலங்காவிற்கு திரும்பி வந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே. வி. பியின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்காவும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாச உடுகம்பொலவும் இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் இந்திய உளவுப் படையுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்கள் எனவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

ஜே. வி. பியின் முன்னாள் தலைவர் றோகண விஜயவீர, உபதலைவர் உபதிஸ்ஸ கமநாயக்க உட்பட 10,000 க்கும் அதிகமானோர் 1989 ஆம் ஆண்டு சிறிலங்கா படையினரால் கோரமாகக் கொலை செய்யப்பட்ட பின்னர் இரகசியமான முறையில் இந்தியாவிற்கு தப்பிச்சென்ற சோமவன்ச அமரசிங்க அந்நாட்டு உளவுப் படையுடன் தொடர்பு கொண்டிருந்ததுடன் அங்கு தங்கியிருந்த நான்கு ஆண்டுகளில் சிறிலங்காவில் மேற்கொள்ளப்பட்ட ஜே வி. பியின் நடவடிக்கையுடன் தொடர்பு கொண்டிருந்தார். சிறிலங்காவிற்கு திரும்பியுள்ள இவர் மொறட்டுவ, நீர்கொழும்பு பகுதிகளில் நடமாடுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க ஜே. வி. பியின் தலைவரான இவர் சிறிலங்கா அரசாங்கத்தின் வீடமைப்பு நிர்மாணத் துறையின் அமைச்சர்சிறிசேன கூரேயின் சகோதரர் எனத் தெரியவந்துள்ளதாக அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## வட, கிழக்கு மாநிலங்கள் வெள்ளத்தால் பாதிப்பு

(டில்லி)

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இந்தியாவின் ஏனைய பகுதிகளுடனான தரைவழித் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. அஸாமின் பிரமபுத்திரா, வாரதா உட்பட எல்லாப் பெரு நதிகளிலும், வெள்ளம் இன்னமும் அபாய அளவுக்கு மேலேயே ஓடிக்கொண்டிருப்பதாகக் கூற தென்பகுதியில் ஐந்து மாவட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளன. வெள்ளத்தால் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை ஒன்பதுக்கும் மேலாக உயர்ந்துள்ளது. இந்தப் பருவகாலத்தில் ஏற்பட்ட மூன்றாவது வெள்ளப் பெருக்கு இதுவாகும். இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் இரண்டரை லட்சம் பேர் அகதி முகாம்க

# ஐ.தே.க. அடுத்த தலைவராக காமினி தெரிவாகலாம்?

## கண்டியில் இரகசியப்பேச்சு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த தலைவர் பதவிக்கு காமினி திசநாயக்கவை தேர்ந்தெடுக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐ தே. க தலைமையகமான சிறிகோத்தாவில் இருந்துவரும் இரகசியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரத்தில் ஜனாதிபதி டி. பி விஜயதுங்காவிற்கும் ஜ. ஐ தே. மு. தலைவர் காமினி திசநாயக்கவிற்கும் இடையே கண்டியில் நடைபெற்ற இரகசியப் பேச்சுவார்த்தையை தொடர்ந்து மேற்படி முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி விஜயதுங்கவுடனான சந்திப்பின் பின்னரான நிலைமையை காலஞ்சென்ற லலித் அத்துலத் முதலியின் மனைவி திருமதி சிறிமானிக்கு எடுத்து விளக்கிய பின்னர் தீர்க்கமான முடிவு அறிவிக்கப்படலாம் எனவும், திருமதி சிறிமானியை சந்திக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

### பாலர்பாடசாலை விளையாட்டுப் போட்டி

யாழ் சென்றோக்ஸ் சனசமூக நிலைய பாலர்பாடசாலை விளையாட்டுப்போட்டி 21-07-93 புதன்கிழமை நடைபெற்றது.

நிலையத் தலைவர் திரு. மோ. எட்வேட் தலைமையில் நடைபெற்ற இப் போட்டியில் சிறப்பு விருந்தினர்களாக சர்வோதய மாவட்ட இணைப்பாளர் திரு.பா. செல்வரத்தினம், புனிதஆரோக்கியநாதர் ஆலய பங்குத்தந்தை அருட் திரு சாவிஸ் கொலின், கடற்புலிகளின் குருநகர் பிரதேசப் பொறுப்பாளர் திரு சதீஸ் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

பாலர்களின் விளையாட்டுப் போட்டியின் சிறப்பு அம்சமாக பெண் சிறார்களை எதிர்த்து ஆண் சிறார்களின் கயிற்றிழுவைப் போட்டியும், பெண் சிறார்களின் தாய்மார்களும், ஆண் சிறார்களின் தாய்மார்களும்கலந்துகொண்ட கயிற்றிழுவைப் போட்டிகளும் நடைபெற்றன. இப்போட்டியில் பெண்சிறார்களும் ஆண்சிறார்களின் தாய்மார்களும் வெற்றியீட்டியமைகுறிப்பிடத்தக்கது.

## பௌத்த மத பீடங்களை ஒற்றுமைப் படுத்த முடியாது

### வெள்ளவத்தை விகாராதிபதி கவலை

[கொழும்பு]

முக்கியமான தேசிய பிரச்சினையாக இருந்தாலென்ன, சமயப் பிரச்சினையாயிருந்தாலென்ன, இப்போது பல பிரிவுகளாக செயற்படும் பௌத்த பீடங்களை ஒரே அமைப்பின் கீழ் கொண்டுவர முடியாது என்று கூறியுள்ளார் வெள்ளவத்தை கவிசுத்தாரம புராண விகாரையின் பிரதம மதகுரு.

கடந்த வார இறுதியில் நடைபெற்ற மத கூட்டம் ஒன்றில் பேசிய அவர் பௌத்த பீடங்கள் சாதி அடிப்படையிலும், நிக்காய வழிமுறையிலும் பிரிவுபட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

## மகாவலி பிரதேசத்தில் ஒரு லட்சம் குடும்பங்கள்

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்திப் பிரதேசத்தில் தனியார் மயமாக்கல் திட்டம் எதுவும் மேற்கொள்ளப்படுமானால் அது அப்பிராந்திய மக்களின் நலன்களைமேம்படுத்துவதற்காகவே இருக்கும் என்று காணி காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி அத்துக்கோரளை கூறியுள்ளார்.

கொழும்பில் உலக வங்கித் தூதுக்குழுவுடன் பேச்சு நடத்திய அமைச்சர் அங்கு மேலும் கூறுகையில்; துரித மகாவலித் திட்டத்தின் பாரிய நிர்மாணப் பணிகள் யாவும் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டு விட்டதாகவும், குடியமர்த்தும் வேலைகள் நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டார். மகாவலிப்பகுதியில் ஒருலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு விட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

### மாடுகள் உயிரிழந்தன

கடந்தவாரம் ஆலங்கேணிப் பகுதியில் இருந்து கிளாலிக் கரைக்கு படகுகளில் 300 மாடுகள் கொண்டுவரப்பட்டன கொண்டு வந்த வேளை 12 மாடுகள் படகுள் தண்ணீர் முட்டியதால் மரணமானதாக தெரியவருகின்றது.

# ஈராக் ஏவுகணைத் தளம் மீது அமெரிக்கா மீண்டும் தாக்கு

(பக்தாத்)

ஈராக்கிய ஏவுகணைப் பரிசோதனைத் தளமொன்றை அமெரிக்க குண்டுவீச்சு விமானங்கள் நேற்று முன்தினம்

அமெரிக்க விமானம் ஒன்றுஏவுகணைத்தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து அமெரிக்காவின் இரண்டு ஜெட் விமானங்கள் மீது ஈராக் ஏவு

ஈராக்கின் தென்பகுதியில் விமானங்கள் பறப்பதற்கு ஐ நா. தடை விதித்திருக்கும் பகுதியை சவூதி அரேபியாவில் நிலை கொண்டுள்ள

சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள், ஸ்தாபனங்கள் தமது நிதி உதவி அரசின் போர்ச் செலவீட்டிற்குப் பயன்படுத்துவதில்லை என உறுதி செய்து கொள்கின்றனவாயினும் அவற்றின் உதவியானது போரை ஏதோ ஒருவழியில் நடத்த பேருதவி புரிபவையாகவே உள்ளன. அதாவது, கிடைக்கப்பெறும் நிதி உதவி போர் தவிர்ந்த அரசின் ஏனைய செலவீட்டை நிவர்த்தி செய்யும் பட்சத்தில், அரசிற்கு ஏற்றுமதி மூலமும், உள்நாட்டு உற்பத்திமூலமும் கிடைக்கும் வருவாய் போருக்காகச் செலவிடப்படுகின்றது என்பதே உண்மை. அதாவது ஏனைய செலவீடுகளை அந்நிய உதவிகள் கவனித்துக் கொள்ள. போர்ச் செலவீட்டை உள்நாட்டு உற்பத்திகள் கவனித்துக் கொள்கின்றன.

இந்நிலையில், சர்வதேச நிதி நிறுவனங்கள் மீதும், மனிதநேய ஸ்தாபனங்கள் மீதும் சிங்களப் பேரினவாதிகள் தமது கவனத்தைத் திருப்பியுள்ளமைக்குக் காரணம் சிறிலங்கா பெறும் பாரிய நிதி உதவியில், ஒரு சிறுதுளி வடக்கு - கிழக்கு பகுதியில் உள்ள தமிழ் மக்களுக்கும் கசிந்துவிடுவதினாலேயே ஆகும். இக்கசிவானது, சிறிலங்கா அரசாங்கத்தின் விருப்பத்தையும் மீறி, அரசசார்பற்ற நிறுவனங்கள், மனிதநேய ஸ்தாபனங்கள் என்பனவற்றின் முயற்சிகளினால் ஏற்படுபவையாகும். இதுவே சிங்களப் பேரினவாதிகளின் ஆதங்கத்திற்குக் காரணமாகும். ஆனால் இக் கசிவினால் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் சொற்ப உதவிகள், வடக்கு-கிழக்கிற்கென சிறிலங்கா அரசு வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடம் இருந்தும், மனித நேய ஸ்தாபனங்களிடம் இருந்தும் பெற்றுக்கொள்ளும் உதவியின் ஒரு சிறு பகுதியே ஆகும்.

பேரினவாதிகளின் இவ் ஆத்திரம் பொருளாதாரத்தடை மற்றும் யுத்தத்தினால் அல்லலுறும் தமிழ் மக்களுக்கு இவ் உதவிகள் உயிர்வாழ உதவுகின்றன என்பதினாலேயே ஆகும். இது சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்கள் மீது எந்தளவு வெறுப்பைக் கொண்டுள்ளது என்பதையும், அடக்குமுறையை மேற்கொள்ள முற்படுகின்றது என்பதையும் சர்வதேச நிதி நிறுவனங்களும், மனிதநேய ஸ்தாபனங்களும் புரிந்து கொள்வதற்கு பெரிதும் உதவக் கூடியதாகும்.

இந்நிலையில், இலங்கைக்கு என உதவி வழங்குவோர் அனைவரும் தாம் வழங்கும் உதவி தனியாக சிங்கள மக்களுக்கு மட்டும் வழங்கப்படுகின்றது என்பதை புரிந்து கொள்ளுதல் வேண்டும். சிங்கள அரசாங்கமும் சரி, பேரினவாதிகளும் சரி, இந்த விடயத்தில் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டே செயற்பட்டுவருகின்றனர். அவர்கள் வடக்கு - கிழக்கு என ஒதுக்கீடு செய்வது கூட அங்கு குடியேற்றப்பட்டுள்ள சிங்களவருக்கான ஒதுக்கீடே ஒழிய, தமிழ் மக்களுக்கான ஒதுக்கீடு அல்ல. அவை தமிழ் மக்களின் தாயகத்தை அபகரிப்பதற்கான ஒதுக்கீடுகளே ஆகும்

## வட, கிழக்கு மாநிலங்கள் வெள்ளத்தால் பாதிப்பு

(டில்லி)

இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்கள் முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இந்தியாவின் ஏனைய பகுதிகளுடனான தரைவழித் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. அஸாமின் பிரமபுத்திரா, வாரதா உட்பட எல்லாப் பெரு நதிகளிலும், வெள்ளம் இன்னமும் அபாய அளவுக்கு மேலேயே ஓடிக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. பிரமபுத்திராவின் வெள்ளத்தால் அஸாமின் தென்பகுதியில் ஐந்து மாவட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளன. வெள்ளத்தால் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை ஒன்பதுக்கும் மேலாக உயர்ந்துள்ளது. இந்தப் பருவகாலத்தில் ஏற்பட்ட மூன்றாவது வெள்ளப் பெருக்கு இதுவாகும். இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் இரண்டரை லட்சம் பேர் அகதி முகாம்களுக்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசியல், பாதுகாப்புகுறித்து ஒத்துழைப்பு வேண்டும்

### ஆசியான் நாடுகள் தீர்மானம்

(சிங்கப்பூர்)

ஆசிய, பசுபிக் பிராந்தியத்தில் அரசியல் மற்றும் பாதுகாப்பு குறித்து நண்பர்களுடனும் இப் பிராந்தியத்திலுள்ள நாடுகளுடனும் ஒன்றாகச் சேர்ந்து உழைப்பது என்று தென்கிழக்காசிய நாடுகளின் சம்மேளனமான ஆசியான் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் சிங்கப்பூரில் நடைபெற்ற இந்த நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் இருநாள் கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலையான உறவுகளை பராமரித்து பிராந்திய பாதுகாப்பை மேம்படுத்துவதில் ஆக்க பூர்வமான பங்களிப்பை நல்குமாறு இக் கூட்டமைப்பு அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## ரஷ்யாவில்ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல் உள்ளதாம்

(மாஸ்கோ)

ரஷ்யாவில் ஜனநாயகத்திற்கு பாராளுமன்றத்திடமிருந்து அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகக் கூறி அதிபர் பொறிஸ் யெல்ட்சின் தனது விடுமுறையை பாதியிலேயே ரத்துச் செய்துவிட்டு மாஸ்கோவிற்கு திரும்பியுள்ளார்.

யெல்ட்சின் மாஸ்கோவில் இல்லாத சமயம், தனியார்மயமாக்கும் திட்டத்தை பாராளுமன்றம் இடைநிறுத்தி வைத்ததுடன், அவரது முதலாவது துணைப் பிரதமர் விளாடிமிர்கமிக்கோவிற்கு எதிராக குற்ற விசாரணையையும் தொடக்கி இருந்தது தெரிந்ததே.

## வெளிநாட்டு கூலிப்படை காஷ்மீரில் கைதாம்

[டில்லி]

காஷ்மீரில் முஸ்லிம் போராளிகளுக்கெதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இந்தியப் படை வெளிநாட்டு கூலிப் படையினர் 29 பேரை கடந்த வெள்ளி சுட்டுக் கொன்றதாகவும் 14 பேரை கைது செய்ததாகவும் பி. ரி ஐ. கூறுகிறது.

கொல்லப்பட்ட கூலிப்படையினரில் 13 பேர் ஆப்கான் நாட்டவர், இருவர் ஈரானியர், 14 பேர் பாகிஸ்தானியர். கைதானவர்களில் 12 பேர் பாகிஸ்தானியர், ஒருவர் ஆப்கான் நாட்டவர், மற்றுமொருவர் லெபனான் நாட்டவர் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

காஷ்மீரில் முஸ்லிம் போராளிகளுக்கு ஆதரவாக வேறு முஸ்லிம் நாட்டு போராளிகளும் இந்தியப் படைகளுக்கு எதிராக போராடுவதாக கூறப்படுவது தெரிந்ததே.

# ஈராக் ஏவுகணைத் தளம் மீது அமெரிக்கா மீண்டும் தாக்கு

(பக்தாத்)

ஈராக்கிய ஏவுகணைப் பரிசோதனைத் தளமொன்றை அமெரிக்க குண்டுவீச்சு விமானங்கள் நேற்று முன்தினம் இரவு மீண்டும் தாக்கியுள்ளன.

ஈராக்கின் தென்பகுதியிலிருக்கும் விமான எதிர்ப்பு ஏவுகணைத் தளம் ஒன்றின் மீது அமெரிக்க விமானம் ஒன்றுஏவுகணைத்தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து அமெரிக்காவின் இரண்டு ஜெட் விமானங்கள் மீது ஈராக் ஏவுகணைத்தாக்குதல்களை நடத்திருப்பதாக வாஷிங்டனில் பென்டகன் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். எனினும் மூன்று ஜெட் விமானங்களும் பாதுகாப்பாக தளத்திற்கு திரும்பிவிட்டன எனக்கூறிய பென்டகன் அதிகாரி அவை எந்தத் தளத்திற்கு திரும்பின என்பதைத் தெளிவுபடுத்தவில்லை.

ஈராக்கின் தென்பகுதியில் விமானங்கள் பறப்பதற்கு ஐ.நா. தடை விதித்திருக்கும் பகுதியை சவூதி அரேபியாவில் நிலை கொண்டுள்ள அமெரிக்க விமானப்படையினர் பிரிட்டன் பிரெஞ்சு விமானப்படையுடன் இணைந்து கண்காணித்து வருவது தெரிந்ததே.

ஈராக் ஏவுகணைத்தளம் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியிருப்பது இரண்டாவது தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனா வேண்டுகோள்

(பீக்கிங்)

ஆசியப் பிராந்தியத்தில் பொருத்தமான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஆசிய நாடுகளிடையே மீண்டும் புதிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று சீனா கோரிக்கை விடுத்துள்ளது.

## முதல்வர் ஜெயலலிதா உற்சாகமாகவுள்ளார்

[சென்னை]

தமிழக முதல்வர் உற்சாகத்துடன் காணப்படுகிறார் என்றும், வழக்கமான உணவு வகைகளை உண்ண ஆரம்பித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட மருத்துவ அறிக்கையில், இரத்த அமுக்கம் போன்ற உடல் செயல் யாவும் வழக்கம் போல இருப்பதாகவும், அடுத்த வாரம் முதல் படிப்படியாக அலுவலக வேலைகளை ஆரம்பிக்கலாம் எனவும் மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

## தி.மு.க. சார்பில் ஆற்காடு வீராசாமி

ராணிப்பேட்டை இடைத் தேர்தலுக்கான காங்கிரஸ் வேட்பாளர் பெயர் வரும் செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்படும் என்று வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்காடு வீராசாமி தமது கட்சி வேட்பாளராகப் போட்டியிடுவார் என்று தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி நேற்று மதுரையில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தமிழக அரசு

## காவிரிநீர்ப் பிரச்சினையில் கவனம் காட்டவில்லை

### தி.மு.க குற்றச்சாட்டு

(சென்னை)

காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் தமிழ் நாடு அரசு தீவிர கவனம் செலுத்தவில்லை என்று தி. மு கழகத் தலைவர் மு கருணாநிதி குறை கூறியுள்ளார்

மதுரையில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய அவர் காவிரி பள்ளத்தாக்குப் பகுதியில் தண்ணீர் பற்றாக் குறையினால் விவசாயிகள் படும் அவதியை எடுத்துரைக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்று கூறினார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நல்ல மழை இருந்ததினால் காவிரி நடுவர் மன்ற உத்தரவைச் செயற்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறிப்பிட்ட அவர் இந்த ஆண்டு நீர் குறைந்ததால் விவசாயிகளின் எதிர்ப்புக்குப் பிறகுதான் மாநில அரசு விழித்துக்கொண்டுள்ளது என்று கூறினார்.

ஆற்றில் நீர் வரவைக் கண்காணிக்க மீண்டும் கண்காணிப்புக் குழு அமைக்க வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் கூறினார். மாநிலத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாக பழனி மற்றும் ராணிப்பேட்டைத் தொகுதிக்கும் நடக்கவுள்ள இடைக்காலத் தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டும் என்ற தி. மு கவின் நிலையை அவர் மீளவும் வலியுறுத்தினார்.

## நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரிட்டன் அரசு வெற்றி

(லண்டன்)

பிரிட்டன் அரசு நம்பிக்கை கோரும்வாக்கெடுப்பில்வெற்றி பெற்றுள்ளது. இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக 311 வாக்குகளும் எதிராக 299 வாக்குகளும வாக்கெடுப்பின் போது பதிவாகியுள்ளன. இந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியுற்றால் தான் இராஜினாமாச் செய்துவிட்டு இடைத் தேர்தலுக்கு உத்தரவிடப் போவதாக பிரதமர் ஜோன் மேஜர் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஈழநாதம்

**நம்பிக்கையில்லாப் பிரேரணை**

# நரசிம்மராவிற்கு எதிராக வாக்களிக்க அ. தி. மு. க. எம்.பிகளுக்கு பணிப்பு

இன்று ஆரம்பமாக இருக்கும் இந்திய பாராளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரின்போது பாரதீய ஜனதாக்கட்சியினால் கொண்டு வரப்படவிருக்கும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரிப்பது என்று அ. இ. அ. தி. மு. க. முடிவு செய்துள்ளது.

நேற்று சென்னையில் இக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது

நரசிம்மராவ் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சார்பில் பாரதீய ஜனதாக் கட்சியினால் நம்பிக்கையில்லாப் பிரேரணை இக்கூட்டத் தொடரின்போது தாக்கல் செய்யப்படவிருப்பது தெரிந்ததே.

பகுஜன் சமாஜ் கட்சியும், சமாஜவாதி கட்சியும் வாக்கெடுப்பில் கலந்துகொள்வதில்லை என்று முடிவு செய்துள்ளன. ஜனதா தளம் (அஜித் சிங் பிரிவு) இன்னமும் தனது நிலையை வெளிப்படுத்தவில்லை ஆளுங்கட்சிக்கு 251 வாக்குகளும், வாக்களிக்கக் கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 532 ஆகவும், இருக்கும் இந் நிலையிலும் இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணைபால் தமது அரசுக்கு பாதிப்பு எதுவும் நேராது என்று பிரதமர் நரசிம்மராவ் கூறியுள்ளார்.

## தமிழக அரசியலில் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும்

### வாழப்பாடி எச்சரிக்கை

(சென்னை)

இந்திய பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராக பாரதீய ஜனதாக் கட்சி இன்று பாராளுமன்றத்தில் கொண்டுவர இருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அ தி மு.க ஆதரவு தெரிவித்திருப்பதை தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கண்டித்துள்ளார்.

அ. தி. மு. க எடுத்த இந்த முடிவு அது பி. ஜே. பியுடன் கொண்டுள்ள திரை மறைவு உறவையே காட்டுகின்றது என்றும், இது அரசியல் முதிர்ச்சியில்லாத முடிவு என்றும் அவர் கூறினார். அ தி. மு. கவின் இந்த முடிவினால் தமிழக அரசியலில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்றும் வாழப்பாடி ராமமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

**போபர்ஸ் பீரங்கி பேர ஊழல்**

## பெயர்களை வெளியிட நீதிமன்றம் அனுமதி

(டில்லி)

போபர்ஸ் பீரங்கி பேர ஊழலில் சம்பந்தப்பட்டிருந்தவர்களின் பெயர்களை வெளியிடுவதற்கு ஆட்சேபணை தெரிவித்து சுவிட்சலாந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை அந்நீதிமன்றம் ரத்துச் செய்துவிட்டது.

இதையடுத்து இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்த ஏழுபேரின் பெயர்களையும் மத்திய புலனாய்வுக் கழகம் (சி பி ஐ) வெளியிட்டுள்ளது

## கறுப்பு நாள் கூட்டம்

கறுப்பு ஜூலை பத்தாண்டு நினைவுக் கூட்டங்கள் நாளை இரவு 8-00 மணிக்கு தீவக கோட்டம் நாவற்குழி லவனிதா குடியிருப்பிலும், வலிகாமம் கோட்டத்தில் சங்கானை நிகர வைரவர் கோவிலடியிலும், வடமராட்சி வல்வெட்டி திருவில் மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

## எச்சரிக்கையாயிருந்தும் தாக்குதலை தடுக்கமுடியவில்லை

[லண்டன்]

1983 இனக்கலவரம் நடந்து பத்து ஆண்டுகள் நிறைவடையும் இந்நாட்களில் விடுதலைப் புலிகள் தாக்கலாம் என படையினர் நாடுமுழுவதும் எச்சரிக்கையாக இருந்தனர். எனினும் 10 ஆண்டுகளுக்கு முன் போலவே இன்றும் தாக்குதல் நடாத்தப்பட்டது. இவ்வாறு நேற்று மணலாறில் நடைபெற்ற தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்ட பி. பி. ஸி. செய்தியாளர்தெரிவித்தார்.

துப்பாக்கியின் பலத்தைப் பயன்படுத்தி மூன்று முகாம் படையினரும் ஒருவருக்கு ஒருவர் உதவமுடியாதபடி புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் பி. பி. ஸி மேலும் தெரிவித்தது. இத்தாக்குதலில் பல படையினரைக் காணவில்லை என்றும் கூறப்படுகிறது.

## அகோர விமானத் தாக்கு; பலத்த எறிகணை வீச்சு

(மணலாறு)

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதையடுத்து இப்பகுதியில் கடும் விமானத் தாக்குதல் நேற்றுக் காலை முதல் நடத்தப்பட்டு வருகிறது புக்காரா விமானங்களும் உலங்கு வானூர்திகளும் இணைந்து இக் கடும் வான் தாககுதலை மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளை இப் பிராந்தியத்திலுள்ள ஏனைய முகாம்களிலிருந்து கடும் எறிகணைத் தாக்குதல் நேற்று முழுநாளும் மேற்கொள்ளப்பட்டன. பராக்கிரமபுர, முந்திரிகைக்குள இராணுவத்தினர் சரமாரியான எறிகணை வீச்சையும் துப்பாக்கிப் பிரயோகத்தினையும் நேற்று மேற்கொண்ட வண்ணமிருந்தனர்.

தாக்குதல் நடைபெற்ற பகுதிக்கு மேலதிக இராணுவம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் விமானப் படையின் உதவி கோரப்பட்டுள்ளதாகவும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## 'இதயபூமி I' தாக்குதலில் வீரச்சாவடைந்தோர்



லெப். ஈழவேந்தன் (அமீர்)



லெப். துரைக்கண்ணன் (விக்ரம்)



லெப். விமலன் (வில்லவன்)







## தெய்வீக இசை அரங்கு

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையினரால் சிறி முருகன் தண்ணீர்ப் பந்தல் நிர்வாகத்தின் அனுசரணையுடன் வழங்கப்படும் தெய்வீக இசையரங்கு இன்றும் வழமைபோல நாவலர் மணி மண்டபத்தின் முன்னிலையில் நடைபெறவுள்ளது. இன்றைய நிகழ்ச்சியில் சிவஞானசேகரம் அவர்களின் பாட்டும், ஆர். இராதாகிருஷ்ணன் அவர்களின் வயலினிசையும். சோமஸ்கந்தசர்மா அவர்களின் மிருதங்க இசையும் இடம்பெறும்.

# போர்க்கைதிகளின் உறவினர் இருவர் கொழும்பு பயணம்

## கடிதங்களை எடுத்துச் செல்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

யுத்தக்கைதிகள் 33பேரும் எதிர்வரும் 29ஆம் திகதி மீண்டும் உண்ணாவ்ரதம் ஆரம்பிக்கப்போவது குறித்த விபரக் கடிதத்தை எடுத்துக்கொண்டு கைதிகளின் உறவினர்களில் இருவர் நேற்று கொழும்பு புறப்பட்டனர்.

சிறிலங்கா எதிர்க்கட்சி பிரமுகர்கள், பிரிகேடியர் வீரகேகர, அங்கிலிக்கன்ஆயர் கெனத் பெர்னாண்டோ மற்றும் பௌத்த பிக்குகளின் தலைவர்களுக்கும் கடிதங்களை இவர்கள் இருவரும் நேரடியாக கையளிப்பர் என தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சிற்குமான இரு கடிதங்களை தவிர ஏனைய கடிதங்களை ஏற்க சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மறுத்ததை அடுத்தே உறவினர்கள் இருவர் கொழும்பு செல்ல முடிவு செய்தனர்.

ஏற்கனவே தென்னிலங்கை திரும்பிய யுத்தக் கைதிகளின் உறவினர்கள் அம்பாறையில் அரசுக்கு எதிராக ஊர்வலம் நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது இதில் சிங்கள விவசாயிகள், ஆசிரியர்கள், பிக்குகள் ஆகியோர் கலந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கறுப்பு ஜூலை தினத்தில்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

ஏனைய கடிதங்களை ஏற்க சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மறுத்ததை அடுத்தே பிக்குகள் ஆகியோர் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

கறுப்பு ஜூலை தினத்தில்

# லண்டனில் நடந்த மாபெரும் ஊர்வலம்

(லண்டன்)

கறுப்பு ஜூலை தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் இலண்டனில் நடைபெற்ற ஊர்வலத்திலும், பொதுக் கூட்டத்திலும் பல்லாயிரக் கணக்கான மக்களும் பல்வேறு நாடுகளின் விடுதலை இயக்க தொழிற்சங்க பிரதிநிதிகளும் பிரிட்டிஷ் எம்பிகளும் கலந்து கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ் இனத்திற்கு தன்னாட்சி உரிமையுண்டு. இலங்கைக்கு வழங்கப்படும் வெளிநாட்டு உதவி தமிழருக்கு எதிரான போருக்கு பயன்படுகிறது போன்ற வாசகங்கள் அடங்கிய அட்டைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் போட்லன்ட் பிளேசிலிருந்து ஸ்ரபகார் சதுக்கத்திற்கு ஊர்வலம் சென்றது. ஊர்வலம் ஸ்ரபகார்சதுக்கம்வந்தடைந்ததும் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றும்நடைபெற்றது.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் சிலரை பி. பி ஸி. அணுகி பேட்டி கண்டபோது தமது தாயகத்தில் உள்ள மக்களுக்கு தமது ஊர்வலத்தின் மூலம் மன உறுதியை வழங்கக் கூடிய தாக இருக்கும் என்றனர். நாம் இங்கு லண் னில் சுகமாக இருக்கின்றோம். அங்குள்ளவர்கள் எவ்வளவு துன்பப்படுகின்றனர். அதனாலேயேஇந்த ஊர்வலத்தை உலகம் அறிய நடத்துவதாக கருத்து தெரிவித்தனர்.

ஊர்வலத்தை முன்னிட்டு லண்டனில் தமிழர்களின் வர்த்தக நிலைகள் மூடப்பட்டிருந்தன. ஊர்வல முடிவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எல்சல்வடோர் போராளி அமைப்பான எப். எல் எப் என். அமைப்பின் பிரதிநிதி, கியூபெக் தொழிலாளர் சங்க பிரதிநிதியும் உரையாற்றிய போது தமிழருக்கு ஆதரவையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டனர். சில பிரிட்டிஷ்எம்பிகளும்பொதுக் கூட்டத்தில் பேசினர்.

நிதிவர்த்தக

நிறுவனதின் நிர்வாக இயக்குநர் எஸ். பாலசுப்பிரமணியம் மற்றும் பொதுமுகாமையாளர் ஜே. டி. நவரட்ணம் ஆகியோரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது

ஷப்றா நிறுவனத்தின் கிளை கடந்த பத்து வருடங்களாக யாழ்ப்பாணத்தில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

மண்கிண்டி

தாகவும் ஏழு சிப்பாய்களைக் காணவில்லை எனவும் தெரிவித்தது. மேலும் பதினெட்டு இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் தெரிவித்தது.

ஆயினும் இத் தாக்குதலை ஊர்ஜிதப்படுத்திய இந்திய வானொலி, 40 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் தெரிவித்தது.

## கௌரவிப்பு

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஞானவைரவர் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் அண்மையில் பூர்த்தியானபோது கூட்டுப் பிரார்த்தனை நடத்தி வந்த சிவகீத அடியார் வ. நடராசா ஆசிரியர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.


# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 25-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10533

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-2053, 26-5814, 27-7740, 27-4024, 24-7628
27-2016, 26-5046, 26-0547, 24-1250, 43 3576
26-0355, 43-4580, 26-7540, 27-5775, 26-6775
26-5351.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-7961, 28-8229, 41-8445, 40-2829, 27 5449
22-4894, 41-7297, 41-5417. 26-2414.



# மரண அறிவித்தல்

## திருமதி தங்கராஜா தங்கரட்ணம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தில் இல. 81/6 ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராஜா தங்கரட்ணம் 25 - 07 - 93 நேற்று காலமானார். இவர் "ராஜா கூல்பார்" உரிமையாளர் சின்னத்தம்பி தங்கராஜாவின் துணைவியாரும், இராஜேஸ்வரன் [UK]. ஞானவாணி [அவுஸ்திரேலியா], ஞானமாலா [UK], ஞானலதா [அவுஸ்திரேலியா]. ரெட்ணஸ்வரன் [UK], ஞானநிதி [UK], ஞானமதி [UK], ஞானகீதா [கனடா]. நித்திராஜா [UK]. ஞானகௌரி [UK] ஆகியோரின் அன்புத்தாயாரும், விஜயமாலா [UK], தனஞ்ஜெயன் [அவுஸ்திரேலியா]. ஞானலிங்கம் [UK], லோகநாதன் [அவுஸ்திரேலியா]. மோகனா [UK]. ஞானகுமார் [UK]. நந்தகுமார் [UK]. நித்தியானந்தன் [கனடா] உதயகுமார் [UK] ஆகியோரின் அன்புமாமியாரும், காலஞ்சென்ற இராஜசேகரம், இராஜரெட்ணம் [UK]. சிவஞ்ஞானம்மா [UK], மகாலிங்கம் அன்னலட்சுமி சிந்தாமணி [UK] ஆகியோரின் அன்புச் சகோதரியும் பராசக்தி [பிரான்ஸ்], தியாகராஜா [\TR] நித்தியலட்சுமி, தனபாலசிங்கம், பத்மநாதன் [UK], தர்மராஜா [UK], செல்வமலர், சுந்தரவல்லி [UK] காலஞ்சென்ற சேனாதிராஜா [ஆசிரியர்], தவமணிதேவி, செந்தில்நாதன், பாலதுரை [UK] ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-07-93) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேம்பையன் மணல் மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
சி. தங்கராஜா (கணவன்)

(5531)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.




லெப், குயிலன்



லெப். திருமலைநம்பி (பெனான்டோ)



லெப். அழகப்பன் (காந்தி)



லெப். நக்கீரன் (செந்தூரன்)



லெப். தமிழ்வாணன் (வாசன்)



2-ம லெப். புகழரசன்



2-ம் லெப். சியாமணி

மண்கிண்டிமலை இராணுவ முகாம், மற்றும் மினி முகாம்கள், காவலரண்கள் அழிப்பின் போது வீரச்சாவடைந்த பத்து போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.